## <u>மேட்டூர் சார்பு நீதிமன்றம்</u>

| O.S. No. 193/2018 | Date : 11.04.2023 | PW2 |
|---|---|---|
| Name: முருகன் | S/o. குஞ்சுமுத்து | |
| Evidence Recorded Time: 12.46 P.M. to 1.16 P.M | | |

<u>3-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>

நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் ரியல் எஸ்டேட் தொழிலும், ஓயிலாட்ட தொழிலும் செய்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்ல அழைப்பானை வந்ததா என்றால் இல்லை நடராஜ் என்பவர் என்னை சாட்சி சொல்ல அழைத்து வந்தார். இந்த வழக்கு யார் யார் மீது என்ன பிரச்சனைக்காக தாக்கல் செய்துள்ளார் என்றால் நடராஜ் சம்புவின் மீது வீட்டு பிரச்சனைக்காக தாக்கல் செய்துள்ளார். நடராஜ் எனக்கு உறவினரா என்றால் இல்லை, அவர் எனக்கு தெரிந்தவர், ரியல் எஸ்டேட் தொழில் செய்வதால் தெரியும். வாதி, பிரதிவாதிகளை எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியுமா என்றால் தெரியாது, வீரக்கவுண்டர் சொல்லி எனக்கு தெரியும். வீராக்கவுண்டருக்கு எப்போது, எங்கு திருமணம் நடைபெற்றது என்றால் 50 ஆண்டுகளுக்கு முன்பு கஞ்சநாய்க்கன்பட்டியில் திருமணம் நடைபெற்றது. வீராசாமி எனக்கு 30 ஆண்டுகளாக பழக்கம். வீராக்கவுண்டர் அப்பா, அம்மா பெயர் எனக்கு தெரியாது. வீராக்கவுண்டர் முதல் மனைவியின் குழந்தைகளையும் எனக்கு தெரியாது. வீராக்கவுண்டர் முதல் மனைவி எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் சுமார் 45 ஆண்டுகளுக்க சாம்பள்ளியில் இறந்ததாக சொன்னார், எனக்கு நேரடியாக தெரியாது. இரண்டாவது மனைவியுடன் எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் தெரியாது. ஏழு பிள்ளைகள் இருப்பதாக சொன்னார், நேரடியாக தெரியாது. அவருடைய பிள்ளைகளின் பெயர்கள் தெரியுமா என்றால் குஞ்சாண்டியூரில் ஒரு மகள் இருப்பது மட்டும் தெரியும். இரண்டாவது பிரதிவாதி செல்விதான் நான் சொன்ன மகள் என்றால் இல்லை. ஜம்பு இறக்கும்போது வயது என்ன என்றால் தெரியாது, ஐந்தாண்டுகளுக்கு முன்புதான் இறந்தார். அவர் இறப்பிற்கு நான் வந்திருந்தேன். நடராஜுக்கும், தைலம்மாள், செல்வி ஆகியோர்களுக்கு எப்போது திருமணங்கள் நடைபெற்றது என்றால் தெரியாது. நடராஜ்

என்ன விளம்புகை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதாக கூறியுள்ளேன் என்ன விளம்புகை கேட்டுள்ளார் என்றால் சொத்தை கேட்டு வழக்குபோட்டுள்ளார். வீராகவுண்டருக்கு நிலம் இருந்தது சம்மந்தமாக கூறியுள்ளேன், எப்போது, யாரிடம் கிரையம் பெற்றார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. என்ன விலைக்கு வாங்கினார் என்றால் தெரியாது. என்ன சர்வே எண்களில் கிரையம் வாங்கினார் என்றால் பட்டா எண்.803–ல் வாங்கினார், அதன் கிரைய பத்திரத்தை பார்த்துள்ளேன். சர்வே எண் தெரியாது. நடராஜ் தற்போது ஓமலூரில் குடியிருக்கிறார், அவர் வீட்டு முகவரி எனக்கு தெரியாது. ஜம்பு வீட்டு முகவரி தெரியுமா என்றால் சாம்பள்ளியில் குடியிருக்கிறார் என்று தெரியும், முகவரி தெரியாது. பராசக்தி வீட்டு முகவரி தெரியுமா என்றால் தெரியாது, நான் சென்றதும் இல்லை. ஜம்பு, பராசக்தி, சேகர் ஆகியோரது வீட்டிற்கு நான் சென்றுள்ளேனா என்றால் சென்றதில்லை. வீராக்கவுண்டர் குடியிருந்த வீட்டிற்கு சென்றுள்ளேன், அதன் கதவு எண் தெரியாது. டி.எம்.பி. நகர் செல்லும் வழியில் உள்ள ரயில்வே கேட் அருகே உள்ளது, விலாசம் தெரியாது. பராசக்தி, சேகர், தைலம்மாள் ஆகியோரிடம் நான் பேசியது இல்லை. வீராகவுண்டர் எழுதி வைத்த உயிலை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். அது ரத்து செய்யப்பட்ட உயில் ஆகும். உயிலில் யார் சாட்சி கையெழுத்து போட்டார்கள், எந்த தேதியில் எழுதப்பட்டது, யார் எழுதியது போன்ற விவரங்கள் எனக்கு தெரியாது. ரத்து செய்ததில் யார் சாட்சி கையெழுத்து போட்டது, யார் எழுதியது என்ற விவரங்கள் தெரியாது. தாவா சொத்தில் இன்றுவரை என்ன வீடு உள்ளது என்றால் ஒரு கூரை வீடும், ஒரு தார்சு வீடும் உள்ளது. 05.01.2004–ல் உயிலை ரத்து செய்ததாக கூறியுள்ளேன், அது பற்றி தெரியாது. ஜம்பு ராணுவத்தில் இருந்து இறந்துபோன பிறகு அவருடைய தாயார் கமலம் ஓய்வூதிய தொகை பெற்று வந்தார் என்றால் அதுபற்றி தெரியாது. ஜம்புவின் தாயார் இறந்த பிறகு வீராக்கவுண்டர் ஓய்வூதிய தொகையை பெற்றுவந்தார் என்றால் அதுபற்றி தெரியாது. ஜம்பு ராணுவத்தில் என்னவாக பணிபுரிந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் நிலத்தை விற்பனை செய்வதற்கு முயற்சி செய்ததாக கூறியுள்ளேன் அவ்வாறு யார் முயற்சி செய்தார்கள் என்றால் ஜம்புதான் முயற்சி செய்தார. நடராஜனிடம் சென்ற தனக்கு விற்பனை செய்ய கேட்டாரா என்றால் கேட்டார் அதற்கு நடராஜ் ஒத்துக்கொள்ளவில்லை. நான்

குடியிருக்கும் இடத்திற்கும் சாம்பள்ளிக்கும் 15 கி.மீ தூரம் இருக்கும். நான் சொல்வது தவறு என்றாலும் சாம்பள்ளிக்கும் சூரப்பள்ளிக்கும் சுமார் 20 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரியல்ல. நங்கவள்ளியில் இருந்து குஞ்சாண்டியூருக்கு இடைய 9 கி.மீ இருக்கும். குஞ்சாண்டியூரிலிருந்து சாம்பள்ளிக்கு 5 கி.மீ தூரம் இருக்கும், நங்கவள்ளிக்கும் சூரப்பள்ளிக்கும் இடையில் 5 கி.மீ தூரம் இருக்கும். நானே தற்போது 19 கி.மீ தூரம் இருக்கும் என்று கூறியுள்ளேன் என்றால் அவ்வாறு கூறவில்லை. வீராக்கவுண்டருக்கு தெரியாமல் ஜம்புவும் அவரது மனைவியும் எப்போது பட்டாவில் பெயரை மாற்றினார்கள் என்றால் 2014–ல் மாற்றிகொண்டார்கள். ஜம்புவிற்கும், பராசக்திக்கும் திருமணம் செய்வதற்கு முன்பே ஜம்பு பெயரில் பட்டா இருந்தது என்றால் அவ்வாறு இல்லை. 07.01.2018, 03.06.2018 ஆகிய தேதிகளில் நான் எங்கு இருந்தேன் என்றால் சூரப்பள்ளியில்தான் இருந்தேன். பிரதிவாதிகளுக்கும், வாதிக்கும் இடையே தகராறு ஏற்பட்டபோது நான் உடன் இருந்தேனா என்றால் இல்லை. 2015–ல் பராசக்தியும், சேகரும் நடராஜன், அன்பழகனுக்கு எதிராக கருமலைக்கூடல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியும், நானும் காவல் நிலையம் சென்றிருந்தேன். எந்த பிரச்சனையும் செய்யக்கூடாது என்று எழுதிக்கொடுத்தார்கள், அதில் நான் சாட்சி கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. யார் யார் இருந்தார்கள் என்றால் ஊர் பெரியவர்கள் இருந்தார்கள். ஊர் பெரியவர்கள் முன்னிலையில் பஞ்சாயத்து பேசப்பட்டதாக கூறியுள்ளேன் நான் பஞ்சாயத்திற்கு செல்லவில்லை. பஞ்சாயத்தில் யார், யார் கலந்து கொண்டார்கள் என்றால் தெரியாது 50 பேர் கலந்து கொண்டார்கள். வழக்கு பற்றியும், வழக்கு தரப்பினர்கள் பற்றியும் தெரியாமல் நான் அனைத்து சங்கதிகளையும் பொய்யாக கூறுகிறேன் என்றாலும் வாதி கேட்டுக்கொண்டதன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2002–ல் இறந்தபோன ஜம்பு 2014–ம் ஆண்டு தகராறு செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஜம்பு 2002–ல் இறந்துவிட்டார் என்றாலும் நான் ஐந்து வருடங்களுக்கு முன்புதான் அவர் இறந்தார் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து ஜம்புவின் சுயராஜ்யத சொத்து என்றாலும் அவருடைய வாரிசுகள் என்ற முறையில் பராசக்திக்கும், சேகருக்கும் தான் பாத்தியப்பட்டது என்றாலும், வாதிக்கும், 1, 2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது அல்ல

என்றாலும் சரியல்ல. இறந்துபோன வீராக்கவுண்டருக்கு ஒரே மனைவி கமலா என்றும், ஒரே வாரிசு ஜம்பு என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

ஒம்/–PW2,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.